# தமிழரசின் பொதுச்செயலர் பதவியில் மீண்டும் இழுபறி!







## திருமலையில் 19ஆம் திகதி மாநாட்டுக்கு முன்னர் பொதுக் குழு கூடும்போது குழப்பம் வரும் நிலை

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாடு எதிர்வரும் 19ஆம் திகதி திருகோணமலையில் நடைபெறவுள்ளது என்று அந்தக் கட்சியின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார். எனினும், மாநாடு நடைபெறும் வரைக்கும் பொதுச்செயலாளர் பதவி இழுபறி நிலை தொடரும் என்று விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தமிழரசுக் கட்சியின் தலைவர் தெரிவு வாக்கெடுப்பின் ஊடாக நடைபெற்று முடிந்திருந்தது. அதற்கு அமைவாக சிறீதரன் தெரிவாகியிருந்தார். இதன் பின்னர் கட்சியின் ஏனைய நிர்வாகப் பதவிகளுக்கான தெரிவு தொடர்பான மத்திய குழு மற்றும் பொதுக் குழுக் கூட்டம் என்பன கடந்த மாதம் திருகோணமலையில் நடைபெற்றன. பொதுச்செயலாளர் உட்பட நிர்வாகக் குழுவுக்கான பெயர்கள் மத்திய குழுவில் தெரிவு செய்யப்பட்டு அது பொதுக் குழுவுக்குப் பாரப்படுத்தப்பட்டது. பொதுக் குழுவில் இதன்போது குழப்பம் ஏற்பட்டது. இதன் காரணமாக கட்சியின் தேசிய மாநாடும் ஒத்திவைக்கப்பட்டது.

குறிப்பாக பொதுச்செயலாளர் பதவி தொடர்பில் குழப்பம் நீடித்தது. பொதுச் செயளாளராகத் திருகோணமலை மாவட்டக் கிளையின் தலைவர் சண்முகம் குகதாசனின் பெயர் பிரேரிக்கப்பட்டிருந்த நிலையில் அதற்கு எதிர்ப்பு வெளியிடப்பட்டிருந்தது. மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து ஸ்ரீநேசனுடைய பெயரும் அந்தப் பதவிக்குப் பிரேரிக்கப்பட்டிருந்தது. இதனால் குழப்பம் நீடித்தது.

இது தொடர்பில் ஆராயும் கூட்டம் வவுனியாவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (11) நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கட்சித் தலைவர் சி.சிறீதரனும் பங்கேற்றிருந்தார்.

2 ➤

மாலைக்கதிர்
Maalaikkathir

யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -
Yarl Muttram
Youtube Channel


சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 மாசி 02 புதன்கிழமை 14.02.2024 கதிர் 181

## மார்ச் மாதத்திற்கு முன்னர் மின் கட்டணத்தில் மாற்றம்!

எதிர்வரும் மார்ச் மாதத்திற்கு முன்னர் மின்சார கட்டணங்களில் மீண்டும் திருத்தம் மேற்கொள்ளப் படவுள்ளதாக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இலங்கை மின்சார சபை சமர்ப்பித்துள்ள பொது ஆலோசனைகள் மற்றும் முன்மொழிவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டதைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை முன்னெக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதன்படி, பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நாளை முதல் பொதுமக்களின் கருத்துக்கள் கேட்டறியப்படும், என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் மஞ்சுள பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். (04)

## இணையப் பாதுகாப்புச் சட்டத்தினால் முதலீடு செய்வதற்குத் தடைகள் வரும்!

### சமந்தாபவர் ஜனாதிபதியிடம் தெரிவிப்பு



இணையப் பாதுகாப்புச் சட்டத்தினால் வரக்கூடிய கருத்துச் சுதந்திரத்தின் மீதான தாக்கம் இலங்கையின் டிஜிட்டல் பொருளாதாரத்தில் முதலீடு செய்வதற்குத் தடைகளை ஏற்படுத்தும், என சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க நிறுவனத்தின் தலைவர் சமந்தாபவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் அவர் நடத்திய பேச்சுவார்த்தையின் போதே சர்வதேச

2 ➤

## 20 கிலோ கஞ்சா சிக்கியது!




நயினாதீவில் 20 கிலோகிராம் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நயினாதீவு கடற்கரையில் கஞ்சா மறைத்து வைக்கப்பட்டுள்ளது என்று முல்லைத்தீவு மாவட்ட விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த புலனாய்வு தகவலுக்கமைய நேற்று சம்பவ இடத்துக்குக் கடற்படையுடன் இணைந்து விரைந்த விசேட அதிரடிப் படையினர் 20 கிலோகிராம் கஞ்சாவைக் கைப்பற்றினர்.

இதனையடுத்து மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

## சாதாரண தரப் பரீட்சை மே - ஜூனில் 2024 உயர் தரப் பரீட்சை டிசம்பரில்!

### கல்வி அமைச்சர் சுசில் தெரிவிப்பு



2023 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை மற்றும் 2024 ஆம் ஆண்டின் உயர்தரப் பரீட்சைகளை நடாத்துவது தொடர்பான அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, 2023 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையை எதிர்வரும் மே மற்றும் ஜூன் மாதங்களில் நடாத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும், 2024 இன் கல்விப் பொதுத் தராதர உயர் தரப் பரீட்சையை எதிர்வரும் டிசம்பர் மாதம் நடாத்த முடிவெடுக்கப்பட்டுள்ளதாகவும் கல்வி அமைச்சர்

2 ➤

## நாடகமும் அரங்கியலும் முழுநாள் பயிற்சிப் பட்டறை

திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் க.பொ.த உயர் தரப் பரீட்சையில் நாடகமும் அரங்கியலும் பாடத்தில் செய்முறைப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான முழுநாள் பயிற்சிப் பட்டறை எதிர்வரும் 17 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் பி.ப.5 மணி வரை இல 286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சிப் பட்டறையில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள், நாளை மறுதினம்

2 ➤

## சர்ச்சைக்குரிய ஆசிரியர் இடமாற்றத்தை மாவட்டத்தினுள் முன்னெடுக்கத் தீர்மானம்




(ஏயெஸ் மௌலானா)

அம்பாறை மாவட்ட ஆசிரியர்களின் வெளி மாவட்டங்களுக்கான இடமாற்றங்களை இரத்து செய்து, அவர்களுக்கான இடமாற்றங்களை அம்மாவட்டத்திற்குள்ளேயே மேற்கொள்வது என மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இன்று புதன்கிழமை (14) மாவட்ட செயலகத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் பங்கேற்புடன் இடம்பெற்றது.

கிழக்கு மாகாண கல்வி அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட, பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள அம்பாறை மாவட்ட ஆசிரியர்களின் இடமாற்றம் தொடர்பிலும் இக்கூட்டத்தில் கூடிய கவனம் செலுத்தப்பட்டு ஆராயப்பட்டது.

அம்பாறை மாவட்டத்தில் ஆசிரியர் வெற்றிடங்கள் அதிகம் காணப்படுகின்ற நிலையில், மாவட்டத்திற்கு வெளியே ஆசிரியர்கள் இடமாற்றப்படுவதை இரத்துச் செய்து விட்டு, அவர்களை மாவட்டத்திற்குட்பட்ட வலயங்களுக்குள் இடமாற்ற வேண்டும் என்று மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம். அதாஉல்லா மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான பைசல் காசிம், எச்.எம்.எம்.ஹரீஸ்,

2 ➤

# ஃபோன்டெரா கிராமிய மகளிர் வலுவூட்டல் திட்டத்தின் அடிப்படையிலான நிகழ்ச்சித் திட்டம்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

சமூகத்திலுள்ள கிராமிய பெண்களை தொழில்சார் முறையில் வலுவூட்டி சுய தொழிலில் அர்ப்பணிக்கப் படுவதன் மற்றொரு பிரத்தியேக நிகழ்ச்சியாக ஃபோன் டெரா நிறுவனம் செயலமர்வு ஒன்றை ஒழுங்கு செய் திருந்தது.

இந்த நிகழ்ச்சியின் மூலம், பால் உற்பத்தித் தொழி லில் ஈடுபட்டுள்ள பெண்கள் பாலுடன் தொடர்புள்ள ஏனைய உற்பத்திப் பொருட்களை உருவாக்குவதற்கு ஆலோசனைகளைப் பெற்றுக்கொண்டனர்.

போதுமான வளங்கள் இன்மை மற்றும் சமுதாயத் தடை போன்ற பெண்கள் முகம் கொடுக்கும் சவால் களை வெல்வதற்கான தேவைகள் மற்றும் பிற நவீன தொழிநுட்ப உதவிகளை வழங்க ஃபோன்டெரா நிறு வனம் நடவடிக்கை எடுத்துவருவதாகத் தெரிவித்துள் ளது.

# அட்டாளைச்சேனை பள்ளிவாசலுக்கு கிழக்கின் கேடய தலைவர் நிதி உதவி



(நூருல் ஹுதா உமர்)

அட்டாளைச்சேனை அல் ஜென்னா பள்ளிவாச லின் அபிவிருத்தி வேலைத் திட்டத்திற்கு கிழக்கின் கேடயத்தின் தலைவரும், அக்கரைப்பற்று அனைத்து பள்ளிவாசல்கள் சம்மேளன முன்னாள் தலைவருமான எஸ் எம் சபீஸ் நிதியுதவி வழங்கியுள்ளார்.

பள்ளிவாசல் நிர்வாகத்தின் அழைப்பின் பேரில் அங்கு விஜயம் மேற்கொண்ட கிழக்கின் கேடயத்தின் தலைவர் எஸ் எம் சபீஸ், பள்ளிவாசலின் தற்போதைய நிலைமை தொடர்பாக அவதானித்தார். எதிர் வருகின்ற புனித நோன்பிற்கு முன்பு பள்ளிவாசலின் உட்கட்ட மைப்பு நிறைவு செய்ய வேண்டுமென நிருவாகத்தி னர் கோரிக்கை விடுத்தனர். அதற்கமைவாக எஸ் எம் சபீஸ் அவர்களினால் பள்ளிவாசல் தரையை செப்பனிடு வதற்காக நிதி வழங்கப்பட்டது.

நிதி வழங்கும் நிகழ்வில் பள்ளிவாசல் தலைவர் எம்.பி. நஸீர், பள்ளிவாசல் பொருளாளரும் முஸ்லிம் காங்கிரஸின் அட்டாளைச்சேனை மத்திய குழு தலைவ ருமான எஸ்.எல்.ஏ.ஹலீம் ஆகியோர் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# முல்லைத்தீவில் துப்பாக்கி வெடித்து ஒருவர் உயிரிழப்பு

முல்லைத்தீவு - குமுழமுனை, தண்ணிமுறிப்பு காட்டுப் பகுதியில் இன்று அதிகாலை வேட்டைக்குச் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் துப்பாக்கி வெடித்ததில் உயிரிழந்துள்ளார்.

தண்ணிமுறிப்புப் பகுதியைச் சேர்ந்த 48 வயது டைய குடும்பஸ்தரே உயிரிழந்துள்ளார்.

வேட்டைக்குச் சென்றபோது நாட்டுத் துப்பாக்கியை இயக்க முயன்றபோது அது வெடித்ததில் குடும்பஸ்தர் உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)




## நாடகமும் அரங்கியலும் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

16 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்பாக தமது பெயர், விபரங்களை யாழ்.திருமறைக் கலாமன்ற அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு வேண்டப் படுகின்றார்கள்.

மேலதிக விபரங்களுக்கு 021 222 2393, 0776692657, 077 6393620 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம்.

## சர்ச்சைக்குரிய ஆசிரியர் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எஸ்.எம்.எம். முஷாரப் ஆகியோர் வலியுறுத்தினர்.

இதனை ஆமோதித்த ஆளுநர் செந்தில் தொண்ட மான், கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் உயர் அதிகாரிகளின் கருத்துக்களையும் கேட்டறிந்து கொண்டார்.

இதன்படி சம்மந்தப்பட்ட ஆசிரியர்களை மாவட்டத் தினுள் உள்ளக இடமாற்றம் செய்து வெற்றிடங்களை நிரப்புவது என்று தீர்மானிக்கப்பட்டது.

இதற்காக ஒத்துழைப்பு வழங்கிய ஆளுநர் மற்றும் உயர் அதிகாரிகளுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம். அதாஉல்லா நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

## சாதாரண தரப் பரீட்சை மே - .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

மேலும் 2025ஆம் ஆண்டுக்கான முதலாம் தவ ணைக் கல்வி நடவடிக்கைகளை எதிர்வரும் ஜனவரி மாதம் 2 ஆம் திகதி ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ள-தாகவும் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த குறிப் பிட்டுள்ளார். (04)

## இணையப் பாதுகாப்புச் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அபிவிருத்திக்கான அமெரிக்க நிறுவனத்தின் தலைவர் சமந்தா வர் இவ்வாறு கூறியுள்ளார்.

இதேவேளை, ஜனநாயக ஆட்சியின் முக்கியத்துவம் மற்றும் ஆலோசனை சட்டமியற்றும் செயல்முறை குறித் தும் இதன்போது இருவரும் விவாதித்திருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (04)

## தமிழரசின் பொதுச்செயலர் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இழுபறி நிலையிலிருந்த பொதுச்செயலாளர் பத வியை குகதாசன் மற்றும் ஸ்ரீநேசன் இருவருக்கும் சுழற்சி முறையில் வழங்க முடிவு செய்யப்பட்டிருந்தது. அதில் முதலாவது வருடம் யார் பொதுச்செயலாளர் பதவியை வகிப்பது என்பதிலேயே இழுபறி நிலை நீடித்த நிலையில் அதற்கு தற்போது இணக்கம் காணப்பட்டது. முதலாவது வருடம் குகதாசனுக்கும், அடுத்த வருடம் ஸ்ரீநேசனுக்கும் வழங்க தற்போது இணக்கம் காணப்பட்டது.

இதற்கு அமைவாக எதிர்வரும் 19ஆம் திகதி கட்சியின் தேசிய மாநாடு திருகோணமலையில் நடைபெறவுள்ளது என்று கட்சியின் தலைவர் சிறீதரன் தெரிவித்தார்.

எனினும், நீறு பூத்த நெருப்பாகக் கனன்று கொண் டிருக்கும் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் விட யம் எதிர்வரும் 19ஆம் திகதி திங்கட்கிழமையன்று காலையில், திருகோணமலையில், கட்சியின் தேசிய மாநாட்டுக்கு முன்னர் பொதுக் குழு கூடும்போது, சுவாலை விட்டு விளாசி எரியும் என்றும் செய்திகள் கசிந்துள்ளன. (அ)

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com



# யாழ் இந்து பழைய மாணவர்களால் ஆசிரியர்களுக்கு கௌரவிப்பும் வருடாந்த விருது வழங்கல் ஆரம்பமும்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் 1998 ஆம் ஆண்டு உயர்தரப் பிரிவு பழைய மாணவர்களால் அவர்களுக்கு கல்வி பயிற்றுவித்த ஆசிரியர்களுக்கு இன்றைய தினம் கௌரவிப்பு நிகழ்வு இடம் பெற்றுள்ளது.

இந்த ஒன்று கூடல் நிகழ்வானது யாழ் இந்துக்கல்லூரி சபாலிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றுள்ளது.

அத்துடன், இன்றைய தினம் 98 உயர் தரப்பிரிவு பழைய மாணவரான அமரர் விசாகனின் நினைவாக மாணவர்களுக்கு வருடாவருடம் வழங்கும் விருது ஒன்றும் நிறுவப்பட்டது. 1990 ஆம் ஆண்டிலிருந்து அவருடைய வகுப்பில் பயின்ற மாணவர்களின் நிதிப் பங்களிப்பில் இந்த விருது வழங்கல் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மாளிகைக்காடு அல் ஹுசைன் வித்தியால சிறுவர் மெய்வல்லுனர் சான்றிதழ் வழங்கல்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை வலய மட்ட சிறுவர் மெய்வல்லுனர் போட்டியில் வெற்றிபெற்று கிழக்கு மாகாண மட்ட போட்டிகளுக்கு தெரிவான மாளிகைக்காடு அல் ஹுசைன் வித்தியாலய மாணவர்கள் பாடசாலையின் அதிபர் ஏ.சி.எம்.நளீம் தலைமையில் பிரதி அதிபர், ஆசிரியர்களால் நேற்று செவ்வாய்க்கிழமை (13) சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். இம்மாணவர்களுக்குப் பயிற்சியளித்த உடற்கல்வி ஆசிரியர் ஏ.எம்.எம்.ரஜி, விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் ஏ.என்.எம்.ஜெஸாத் ஆகியோர் இதன்போது கௌரவிக்கப்பட்டனர்.

# சம்மாந்துறை பிரதேச செயலக உள்ளக கிரிக்கெட் சுற்றுப்போட்டி



(எம்.எம்.றம்ஸீன்)

சம்மாந்துறை பிரதேச செயலக நலன்புரி அமைப்பினால் வருடாந்தம் நடத்தப்படும் உள்ளக கிரிக்கெட் சுற்றுப்போட்டி உதவி பிரதேச செயலாளர் யு.எல்.அஸ்லம் தலைமையில் சம்மாந்துறை பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

உத்தியோகத்தர்களுக்கிடையே உடல் ஆரோக்கியத்தையும், மன வலிமையையும், திறன் வளர்ச்சியையும் ஏற்படுத்தும் நோக்கில் வருடாந்தம் நடைபெறும் இப் போட்டியில் இம்முறையு 8 அணிகள் கலந்து கொண்டன.

அணிக்கு 7 பேர் கொண்ட 5 ஓவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட போட்டிகளைக் கொண்ட இந்தச் சுற்றுப் போட்டிக்கு அதிதிகளாக சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.முஹம்மத் ஹனீபா மற்றும் அம்பாறை மாவட்ட செயலக பிரதம பொறியியலாளர் ஏ.பி சாஹீர் ஆகியோர் அழைக்கப்பட்டிருந்தனர்.

இந்நிகழ்வில் கணக்காளர் ஐ.எம் பாரிஸ், கிராம சேவை உத்தியோகத்தர் எம்.எல்.எம் தாஸீம், கிளைத் தலைவர்கள் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இச்சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டிக்கு நிர்வாகக் கிளையும் வெளிக்கள கிளையும் தெரிவாகியிருந்தன. இதில் நிர்வாகக் கிளை 43 ஓட்டங்களினால் வெற்றி பெற்று இந்த ஆண்டு சம்மாந்துறை பிரதேச செயலக உள்ளக கிரிக்கெட் சம்பியனாகியது.



# மிதி வெடி

*உயிருக்குப் பெறுமதி இல்லாமல் போயிட்டுது பாருங்கோ.... எதுக் கெடுத்தாலும் உயிரை விடுறது இப்ப வழக்கமாப் போயிட்டுது...*

*பேப்பரைத் திறந்தா ஆகக் குறைந்தது ஒரு அவச் சாவெண்டாலும் இருக்கும். அதிலும் "தவறான முடிவெடுத்து உயிர் மாய்ப்பு" எண்ட செய்தி வராத நாளே இல்லை எண்டு சொல்லலாம்.*

*தாய், தகப்பன் பெத்து, தலாட்டி, சீராட்டி வளர்த்து விட - கண்ணுக்கு முன்னால வளர்ந்த பிள்ளையப் பறிகுடுக்கிறது எண்டது எவ்வளவு வேதனை பருங்கோ.... சாகத் துணிஞ்ச சனத்துக்கு.. வாழத் துணிவில்லை... ஒரு நிமிசம்... ஒரேயொரு நிமிசம் யோசிச்சாப் போதும் முடிவு மாறிப் போகும். பெத்ததுகளையும், கூடப் பிறந்ததுகளையும் யோசிச்சாப் போதும்... என்ன தான் தலைபோற விசியமா இருந்தாலும் வாழ்ந்து காட்டுறன் எண்ட வைராக்கியம் வரவேணும்.*

*இந்தக் கிழமை அநியாயமா ஒரு அரசாங்க உத்தியோகத்தரின் உயிர் பறிக்கப்பட்டிருக்கு.... பறிக்கப்பட்டிருக்கு எண்டா ஆரும் பறிக்கேல்ல.. அவாவே தன்ரை உயிரை எடுத்திருக்கிறா.... வேலை செய்யுற இடத்தில ஏதோ பிரச்சினையாம்.... இடமாற்றம் வந்ததால உயிரை விட்டுட்டாவாம் எண்டு கதைக்கினம்.*

*ஒண்டு மட்டும் தான் சொல்லலாம்.... ஒருத்தரும் பிறக்கேக்கையே இன்ன இடத்தில, இன்ன வேலை தான் எண்டு சொல்லிப் பிறக்கிறேல்ல. கால ஓட்டத்தில படிக்கிற படிப்புக்கும், இருக்கிற தகுதிக்கும் கிடைக்கிற வேலையைச் சிறப்பாச் செய்ய வேணும். அதிலும் அரசாங்க உத்தியோகம் எண்டா அஞ்சு வருசத்துக்கு ஒருக்கா இடமாற்றத்தை எதிர்பார்க்கத் தானே வேணும். சரி, அப்பிடித் தான் இல்லையெண்டா ஒரு "அப்பீல்" போட்டுப் பார்க்கிறது. இதென்ன "கம்பசே"? - கையில வாங்கின கடிதத்துக்குப் பதில் தராமல் விடுறதுக்கு?*

*"கவன்மென்ற்"ல நீங்கள் ஏற்கிறியளோ, இல்லையோ - உங்கள் முறைப்பாடு ஏற்றுக் கொள்ளப்படுதோ, இல்லையோ கட்டாயம் "ரிப்ளை" வரும். ஏனெண்டா "சிஸ்ரம்" அப்பிடி!*

*இடமாற்றம் எண்டோண்ணதான் ஞாபகம் வருகுது... மாநகரத்துக்கு ஒரு மாதிரி விடுதலை கிடைச்சுட்டுது... அறிஞ்சிருப்பியள்... ஏழு வருசமாச எல்லாமாக இருந்து ஆணை பிறப்பிச்சவரை ஒரு மாதிரி அனுப்பிப் போட்டினம். இனி மாநகரத்துக்குள்ள இருக்கிற எல்லாத் திணைக்கயங்களும் சுயாதீனமா முடிவெடுப்பினம்.. சுதந்திரமாச் செயற்படுவினம் எண்டு நம்பலாம்.*

*"ஆய" கலைகள் அறுபத்து நான்கினையும் ஐயம் திரிபுறக் கற்றவரா இருந்தாலும், சபையைச் செயல்படுத்துறவரா இருந்தாலும் - ஆணையிட உதவி செய்தாலும் - எல்லாம் நானே எண்டு நிண்டவர் ஒண்டுக்கும் விடேல்ல. சுகாதார வைத்திய அதிகாரியும் நானே... பிரதம நூலகரும் நானே எண்டு ஒருத்தரையும் வேலை செய்ய விடாமல் தானே தனிநடனம் புரிஞ்சவருக்கு இப்ப இடமாற்றம். இப்பிடித் தான் - இந்தா.... அந்தா எண்டு சொல்லிச் சொல்லி ஏழு தரம் இடமாற்றத்தை ரத்துச் செய்த மனுசன், இந்த முறை ஒண்டும் செய்யேலாமல் போயிட்டார்.*

*என்ன? இனி அங்க இருந்து வந்து இங்க வந்து பிள்ளையளைப் பள்ளிக் கூடத்தில ஏத்தி, ரியூசனில விடுறத்துக்கு "ஒஃபிஸல் வெயிக்கிள் நொட் அவைலபிள்"... பிள்ளையள ஏத்துறதுக்கும், மனிசிய இறக்கிறதுக்கும், சந்தையில சமான் வேண்டுறதுக்கும் "அசைன்ட் வெயிக்கிள்" பாவிச்ச கனபேருக்கு இப்ப இது தான் நிலைமை. நாங்கள் என்ன அப்பிடி ஒரு "ஆட்டோ அரேஞ்" பண்ண வழி இல்லாமலே இருக்கிறம்? எண்டு சொல்லுறது கேக்குது... அப்பிடியான நீங்கள் அப்பவே அப்பிடிப் பிள்ளையளைப் பழக்கி இருந்தால் இப்பக் கஸ்டமில்லையே?*

*இதுக்குள்ள இன்னுமொரு விசியமும் கிடக்கு.... அலுவலக வாகனம் வேண்டாம் - நாங்கள் எங்கட சொந்த வாகனத்தைப் பாவிப்பம் எண்டு சொல்லி "ப்யூவல் அலவன்ஸ்" வாங்கிற கனபேர் அலுவலகம் வாறதுக்கு மட்டும் தான் சொந்த வாகனத்தைப் பாவிக்கினமாம்.. "ஒஃபீஸ்" வந்ததும் வெளியில போற வேலை எல்லாத்துக்கும் "ஒஃபிஸல் வெயிக்கிள" பாவிச்சுப் போட்டு, கீழ இருக்கிற இள நிலை அதிகாரியின்ர பெயரில "ரண்ணிங் சாட்" போகுதாம்... அப்பிடி "ரண்ணிங் சாட்"ல கையெழுத்து வைக்காத "ஜூனியர்" மாருக்கு "இங்கிரிமென்ர" நிப்பாட்டிறதும், "புறமோசனை" சிபார்சு செய்யாமல் விடுறதும் வழக்கமாம்.*

*உதென்ன புதினமே? அரசாங்க அலுவலகங்கள் எண்டாலே இப்பிடித் தானே? தங்கட வாகனத்துக்குச் சுளையாக் காசை வாங்கிக் கொண்டு, அரசாங்க வாகனத்தைப் பாவிக்கிறது புதுசோ? எண்டு நீங்கள் முணுமுணுத்தாலும், நாங்கள் உத்தமர்கள் - எங்கள் கைகள் சுத்தமானவை எண்டு சொல்லிற பலபேர் இந்தப் பட்டியலுக்குள்ள அடக்கம். இன்னொரு முறை மிதிவெடியில அது வெடிக்கும்!*

*மாநகருக்கு இப்ப புதுசா வந்திருக்கிறவர் ஒரு திறமைசாலி... ஆஜானபாகுவான இவர், அவரைப் போல "பப்பரப்பை" இல்ல எண்டினம். மனுசன் வந்து பதவி ஏற்றதும் செய்த முதல் வேலை அவரவர் அதிகாரங்களை அவரவருக்கே பகிர்ந்து குடுத்தது தானாம். இவ்வளவு நாளும் வேலை செய்தது ஆரோ, முகப் புத்தகத்தில் படம் போட்டது ஆரோ தானே? இனி அப்பிடி இருக்காது எண்டு நம்புறன்.*

*எண்டாலும் பாருங்கோ... யார் வந்தாலும் அந்த இடம் அப்பிடி மாத்திப்போடும் எண்டு சொல்லினம்... புதுசா வந்தவருக்குச் செய்த வரவேற்பு விழாவைப் பாத்தியள் எண்டா விளங்கும்.. வாளி வைச்சு... வாளி வைச்சுப் பழக்கப்பட்டுப் போனவைக்கு சாதாரணமா வேலை செய்யத் தெரியாது பாருங்கோ... வைக்கிற வாளி ஓட்டை வாளியா இல்லாமல் பாத்துக் கொள்ளுங்கோ....!!!*

*-நரமுனி-*

# பாகிஸ்தான் பிரதமராக ஷாபாஸ் ஷெரீஃப் போட்டியிலிருந்து விலகினார் பிலாவல்



பாகிஸ்தான் அரசியலில் திடீர் திருப்பமாக முன்னாள் பிரதமரும், தனது இளைய சகோதரருமான ஷாபாஸ் ஷெரீஃபை (72) புதிய பிரதமராக முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீஃப் நியமனம் செய்துள்ளார்.

புதிய அரசில் பிரதமர் பதவியைக் கோரப் போவதில்லை என்றும் ஆட்சியில் பங்கேற்காமல் வெளியில் இருந்து ஆதரவு தெரிவிப்பேன் என்றும் முன்னாள் வெளியுறவுத் துறை அமைச்சர் பிலாவல் புட்டோ ஸர்தாரி அறிவித்த சில மணி நேரத்தில் இந்த அறிவிப்பை நவாஸ் வெளியிட்டுள்ளார்.

பாகிஸ்தானின் மூன்று முறை பிரதமரான நவாஸ் ஷெரீஃப்தான் மீண்டும் அந்தப் பொறுப்பை ஏற்பார் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், அவரது சகோதரரும், பாகிஸ்தான் முஸ்லிம் லீக் - நவாஸ் கட்சியின் (பிஎம்எல்-என்) தலைவருமான ஷாபாஸ் ஷெரீஃப் புதிய பிரதமராகவும், நவாஸ் ஷெரீஃபின் மகள் மர்யம் நவாஸ் (50) பஞ்சாப் மாகாணத்தின் முதல்வராகவும் நியமிக்கப்படுவார்கள் என்று அவரது கட்சியின் செய்தித்தொடர்பாளர் மரியம் ஔரங்கசீப் நேற்று செவ்வாய்க்கிழமை நள்ளிரவு அறிவித்தார். நவாஸ் ஷெரீஃப் ஒப்புதல் தெரிவித்துள்ளதாகவும் மரியம் தெரிவித்தார்.

பாகிஸ்தான் 23 ஆவது பிரதமராக ஷாபாஸ் ஷெரீஃப் 2022 ஏப்ரல் முதல் 2023 ஒகஸ்ட் வரையில் பதவி வகித்திருந்தார்.

பாகிஸ்தான் நாடாளுமன்றத் தேர்தல் கடந்த 8 ஆம் திகதி நடைபெற்றது. இந்தத் தேர்தலில், ராணுவத்தின் ஆசி பெற்ற பாகிஸ்தான் முஸ்லிம் லீக்-நவாஸ் கட்சியின் (பிஎம்எல்-என்) தலைவர் நவாஸ் ஷெரீஃப் அதிக இடங்களைக் கைப்பற்றி 4 ஆவது முறையாக நாட்டின் பிரதமர் ஆவார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆயினும், முன்னாள் பிரதமரும், கிரிக்கெட் நட்சத்திரமுமான பாகிஸ்தான் தெஹ்ரீக்-ஏ-இன்சாஃப் (பிடிஐ) கட்சியின் ஆதரவு பெற்ற சுயேச்சை வேட்பாளர்கள்தான் இந்தத் தேர்தலில் மிக அதிக தொகுதிகளைக் கைப்பற்றினர். ஊழல் மற்றும் ரகசியக் காப்புறுதி மீறல் வழக்கில் இம்ரான் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். மேலும், அவரது கட்சி தேர்தலில் பங்கேற்க தடை விதிக்கப்பட்டதுடன், கட்சின் கிரிக்கெட் மட்டை சின்னமும் முடக்கப்பட்டது.

இந்தச் சூழலிலும், நாடு முழுவதும் சுயேச்சையாகப் போட்டியிட்ட பிடிஐ கட்சியினர் 101 இடங்களில் வெற்றி பெற்றனர். அதிகாரம் நிறைந்த ராணுவத்தின் ஆதரவு இருந்தாலும், நவாஸ் ஷெரீஃபின் பிஎம்எல்-என் கட்சி 75 இடங்களை மட்டுமே பெற்று இரண்டாவது இடத்தைப் பிடித்தது. முன்னாள் வெளியுறவுத் துறை அமைச்சர் பிலாவல் புட்டோ ஸர்தாரியின் தலைமையிலான பாகிஸ்தான் மக்கள் கட்சி (பிபிபி) 54 தொகுதிகளில் வெற்றி பெற்றது.

இந்த நிலையில், அதிக இடங்களைக் கைப்பற்றியிருந்தாலும் பிஎம்எல்-என் கட்சியுடனோ, பிபிபி கட்சியுடனோ இணைந்து ஆட்சியமைக்கப் போவதில்லை, எதிர்க்கட்சியவே செயல்படுவோம் என்று இம்ரான் கான் கூறிவிட்டார்.

பிடிஐ அல்லாத பிற கட்சிகளுடன் இணைந்து பிஎம்எல்-என் மற்றும் பிபிபி கட்சியால் ஆட்சியமைக்க முடியும். இருந்தாலும், புதிய அரசில் தங்களது தலைவர் பிலாவல் புட்டோ ஜர்தாரிக்குத்தான் பிரதமர் பதவி அளிக்கப்படவேண்டும் என்று பிபிபி கட்சி வலியுறுத்தியது.

எனினும், நவாஸ் ஷெரீஃப்தான் மீண்டும் பிரதமராகவேண்டும் என்று பிஎம்எல்-என் கூறி வந்தது. இதனால், புதிய அரசு அமைவதில் இழுபறி நீடித்து வந்தது. இந்த நிலையில், புதிய அரசில் பிரதமர் பதவியைக் கோரப்போவதில்லை, அந்த அரசிலும் இணையப் போவதில்லை, அரசுக்கு வெளியிலிருந்து மட்டுமே ஆதரவு தருவோம், என்று பிலாவல் புட்டோ ஸர்தாரி அறிவித்துள்ளார்.

பிரதமர் பதவி போட்டியில் இருந்து விலகுவதாக செய்தியாளர்களிடம் அறிவித்த பிலாவல் புட்டோ, 'நான்காவது முறையாக நவாஸ் ஷெரீஃபை பிரதமராக்க வெளியில் இருந்து ஆதரவு தெரிவிக்கிறேன். அதேநேரத்தில் எனது தந்தை ஆசிப் அலி ஸர்தாரியை மீண்டும் அதிபராக பார்க்க விரும்புகிறேன். பாகிஸ்தானை நெருக்கடியில் இருந்து காப்பாற்ற இது உதவும்' என்றார்.

தற்போது பாகிஸ்தானின் அதிபராக இருக்கும் ஆரிஃப் அல்வியின் பதவிக் காலம் அடுத்த மாதம் முடிவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (04)

# இஸ்ரேலுக்கு ஆதரவாக விளம்பரம் பாலஸ்தீன ஆதரவாளர்கள் பதிலடி!




இஸ்ரேல், பாலஸ்தீனத்தில் இனப்படுகொலை செய்வதாக சர்வதேச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ள நிலையில், தனது தரப்புப் போர்க் குற்றங்களை நியாயப்படுத்த விளம்பரம் ஒன்றை இஸ்ரேல் வெளியிட்டுள்ளது.

சூப்பர் பவுல் எனப்படும் கால்பந்துப் போட்டிக்கான நேரத்தில் இஸ்ரேல் வெளியிட்டுள்ள விளம்பரம் ஒன்றில, அனைத்துத் தந்தைகளையும் மீண்டும் வீடு திரும்ப வைக்கவே இஸ்ரேல் இந்தப் போரைத் தொடர்ந்து வருகிறது என்ற கருத்தைப் பரப்ப முயற்சித்துள்ளது.

அந்த விளம்பரத்தில் 'பாசமான தந்தைகளே, விளையாட்டான தந்தைகளே, சாகசம் செய்யும் தந்தைகளே உங்கள் அனைவரையும் விரைவில் வீடு திரும்ப வைப்போம்' எனும் வசனங்கள் இடம்பெறுகின்றன.

இந்நிலையில், இதற்குப் பதிலளிக்கும் வகையில் வகையில் பாலஸ்தீன ஆதரவாளர்கள் வெளியிட்ட விளம்பரத்தில் காஸாவில் இறந்த குழந்தைகளுடன் தந்தைகள் கதறி அழும் காட்சிகள் இடம்பெற்றுள்ளன. அதில் 'வீரமான தந்தைகளே, பொறுமையான தந்தைகளே, இஸ்ரேல் ராணுவத்தால் கொல்லப்பட்ட தந்தைகளே உங்கள் அனைவருக்கு நியாயம் பெற்றுத் தருவோம்' என்ற வசனங்கள் இடம்பெற்றுள்ளன.

சர்வதேச அமைப்புகள் பலவும் இஸ்ரேலின் போர்க் குற்றங்களையும், இரக்கமற்ற தாக்குதல்களையும் கண்டித்துவரும் நிலையில், இஸ்ரேல் தொடர்ந்து தன் தாக்குதல்களையும் கொலைகளையும் நியாயப்படுத்த முயற்சிகள் செய்கிறது, என்று குற்றஞ்சாட்டப்படுகிறது. (04)

# நியூயோர்க் ரயில் நிலையத்தில் துப்பாக்கிச்சூடு - ஒருவர் பலி!




*நியூபோர்க்கின் ப்ரான்க்ஸ் ரயில் நிலையத்தில் மர்மநபர் ஒருவர் திடீரென நடத்திய துப்பாக்கிச்சூட்டில் ரயில் நிலைய பயணி ஒருவர் உயிரிழந்ததோடு, 5 பேர் காயமடைந்துமுள்ளனர்.*

*ப்ரான்க்ஸ் பகுதியில் உள்ள மவுண்ட் ஈடன் ஏவ் ரயில் நிலையத்தில் நேற்று கடந்த திங்கள் மாலை 4.30 மணியளவில் மர்ம நபர் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 4 ஆண்கள் மற்றும் 2 பெண்கள் படுகாயமடைந்தனர். அதில் 34 வயதான நபர் சிகிச்சை பலனின்றி பரிதாப மாக உயிரிழந்தார்.*

*துப்பாக்கிச்சூடு நடத்திய நபர் பயணித்துக்கொண்டிருந்த ரயிலில் அவருக்கும் அங்கிருந்த சிலருக்கும் இடையே தகராறு ஏற்பட்டதாகக் கூறப்படும் நிலையில், ரயில் நிலையத்தில் இறங்கியதும் அந்த நபர் தன் கையிலிருந்த துப்பாக்கியால் அங்கிருந்தவர்களை நோக்கிச் சுட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பாக வழக்குப்பதிவு செய்து, தப்பியோடிய நபரை காவல் துறையினர் தேடி வருகின்றனர்.*

# தெற்கு ஜப்பானில் பறவைக் காய்ச்சல் 14,000 பறவைகள் அழிக்கப்பட்டன!



தெற்கு ஜப்பானில் பறவைக் காய்ச்சல் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து சுமார் 14 ஆயிரம் பறவைகள் அழிக்கப்பட்டுள்ளன.

ககோஷிமாவின் மினாமிசாட்சுமா நகரில் உள்ள கோழிப் பண்ணையில் பறவைக் காய்ச்சல் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில், தெற்கு ஜப்பானில் 14 ஆயிரம் பறவைகள் அழிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நோய்த்தொற்று மேலும் பரவாமல் தடுக்க, பாதிக்கப்பட்ட பகுதியிலிருந்து 3 கி.மீ முதல் 10 கி.மீ வரையுள்ள 15 பண்ணைகளில் வளர்க்கப்படும் சுமார் 3,63,000 கோழிகள் மற்ற இடங்களுக்கு கொண்டுச் செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அழிக்கப்பட்ட பறவைகளை அடக்கம் செய்வதும், கோழிப்பண்ணைகளைச் சுத்தம் செய்யும் பணிகளும் அடுத்த சில நாள்களுக்குள் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜப்பானில் பறவைக் காய்ச்சல் சீசன் பொதுவாக ஒவ்வோர் ஆண்டும் ஒக்டோபரில் தொடங்கும். கடந்த பருவத்தில், ஜப்பானில் 47 மாகாணங்களில் சுமார் 26 பண்ணைகளில் நோய்க்கிருமி தொற்று ஏற்பட்டு 17.71 மில்லியன் பறவைகள் அழிக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (04)

# நீர் சுத்திகரிப்பு நிலையத் திட்டத்தினை பார்வையிட்ட எம்.எஸ். தௌபீக் எம்.பி.



(எஸ்.சினீஸ் கான்)

திருகோணமலை மாவட்ட குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கும் முகமாக குச்சவெளி பள்ளவக்குளம் பிரதேசத்தில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ் தௌபீக்கின் வேண்டுகோளிற்கிணங்க, சமூக நீர் வழங்கள் திணைக்களத்தின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் அமைக்கப்பட்டுவரும் நீர் சுத்திகரிப்பு நிலையத்தினை நேற்று செவ்வாய்க்கிழமை (13) நாடாளுமன்ற உறுப்பினர் பார்வையிட்டார். இதன்போது, இந்த அபிவிருத்தித் திட்டம் தொடர்பாக பிரதேச மக்களோடு கலந்துரையாடப்பட்டது.

## கல்முனை ஜீனியஸ் விளையாட்டுக்கழக புதிய கிரிக்கட் சீருடை அறிமுக நிகழ்வு!



(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை ஜீனியஸ் விளையாட்டுக் கழகத்தின் கிரிக்கட் அணிக்கான புதிய சீருடை அறிமுக நிகழ்வு

கழகத்தின் ஆயுள்கால தலைவர் சட்டத்தரணி ஏ.எம்.றொஸான் அக்தர் தலைமையில் நிந்தவூர் எம்.ஏ.சி.உள்ளக அரங்கில் இடம் பெற்றது.

இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக சீருடைக்கான அனுசரணையாளரும் கட்டார் இன்ஸா ட்றேடிங் நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளர் ஆர்.எம்.இஹ்ஸான் கலந்து கொண்டு கழக சீருடையை அறிமுகம் செய்து வைத்தார்.

இந்நிகழ்வுக்காக இணை அனுசரணை வழங்கிய நிதா ஹொலி ட்டுவர்ஸ் நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளர் ஜே.எம்.ஸப்னிஸ், ஜமாலியா ஜுவல்ஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் எம்.எம்.சஜான், கழகத்தின் வளர்ச்சிக்காக என்றும் ஆதரவு வழங்கி கொண்டிருக்கும் எம்.நஜாத் ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்டனர்.

## தாம்போதி குறித்து ஆராய செயலாளர் நேரடி விஜயம்!



(வி.ரி. சகாதேவராஜா)

சம்மாந்துறை வீரமுனை அலவாக்கரை வீதியில் உள்ள இரண்டு தாம்போதிகளின் நிர்மாணம் குறித்து ஆராய கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் எம். கோபாலரத்தினம் நேரடி விஜயமொன்றை நேற்று மேற்கொண்டிருந்தார்.

இதன் போது குறித்த இரண்டு தாம்போதிகள் குறித்த காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யப் படாதமை குறித்து ஆராய்ந்தார். குறித்த ஒப்பந்தக்காரர் பணியை ஒருவார காலத்தில் முடிவுறுத்த வேண்டும் என்றும் அவர் ஆலோசனை வழங்கினார்.

முன்னதாக அவர் கல்முனை பிராந்திய வீதி அபிவிருத்தி திணைக்கள அலுவலகத்திற்கும் விஜயத்தை மேற்கொண்டார்.

கல்முனை பிராந்திய வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் நிறைவேற்றுப் பொறியியலாளர் எந்திரி எம்.எம். முனாஸ் செயலாளரை வரவேற்றார். அலுவலகத்தில் பணிகள் பற்றி ஆராயப்பட்டது.



# பூட்டான் நாட்டில் நடைபெறவுள்ள சார்க் உச்சி மாநாட்டில் கலந்து கொள்ளும் வாய்ப்புப் பெற்ற ஓட்டமாவடி மாணவி



(எம்.எம்.றம்ஸீன்)

ஓட்டமாவடி பிரதேச செயலக பிரிவில் உள்ள நியூ டலண்ட் சிறுவர் கழகத்தின் தலைவி முகம்மது இஸ்மாயில ரணா சுக்ரா பூட்டான் நாட்டில் நடைபெற இருக்கும் சார்க் உச்சி மாநாட்டில் இலங்கையின் பிரதிநிதியாக கலந்து கொள்ளவுள்ளார்.

இவர் ஏஐ தொழிநுட்பத்தை பயன்படுத்தி கதைகூறல் போட்டியில் தேசிய விருது பெற்றதன் அடிப்படையில் சார்க் உச்சிமாநாட்டில் கலந்து கொள்வதற்கான வாய்ப்பு அவருக்குக் கிடைத்துள்ளது.

முகம்மது இஸ்மாயில் ரணா சுக்ரா ஓட்டமாவடி 01 208பி-2 கிராம உத்தியோகத்தர் பிரிவில் இயங்கும் நியூ டலண்ட் சிறுவர் கழகத்தின் தலைவியும் கோறளைப் பற்று மேற்கு பிரதேச செயலக சிறுவர் சபையின் செயலாளரும் மட்டக்களப்பு மாவட்ட சிறுவர் சபை செயலாளரும், தேசிய சிறுவர் சபையின் இணைச் செயலாளருமாவார். ஓட்டமாவடி பாத்திமா பாலிகா மகா வித்யாலய மாணவியான முகம்மது இஸ்மாயில் ரணா சுக்ரா பூட்டான் நாட்டில் நடைபெற இருக்கும் சார்க் உச்சி மாநாட்டின் ஒரு அங்கமான தெற்காசிய சிறார்கள் எதிர் நோக்கும் சமகால சவால்கள் தொடர்பாக எதிர்வரும் 27,28 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ள கூட்டத்தொடரில் பங்கு கொள்வதற்காக இலங்கையின் பிரதிநிதியாகச் செல்லவுள்ளார்.

இவர் ஓட்டமாவடி கோட்ட கல்வி அலுவலக பிரிவில் உள்ள காகிதநகர் மில்லத் வித்தியாலய அதிபரும் எழுத்தாளருமான முகம்மது இஸ்மாயில் (வாழை மயில்) தம்பதிகளின் புதல்வியாவார்.

# இடமாற்றத்தை இரத்துச் செய்யுமாறு கோரி கிழக்கு மாகாண ஆசிரியர்கள் போராட்டம்!



(அஸ்ஹர் ஆதம்)

கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் அண்மையில் வெளியிடப்பட்டுள்ள ஆசிரியர் இடமாற்ற பட்டியலை இரத்து செய்யுமாறு கோரி கல்முனை மற்றும் சம்மாந்துறை கல்வி வலய ஆசிரியர்களால் அம்பாறை மாவட்ட செயலகம் முன்பாக கண்டனப் போராட்டமொன்று இன்று முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர எச்.எம்.எம் ஹரீஸ் இவர்களை நேரடியாக சந்தித்து பிரச்சினைகளை கேட்டறிந்து கொண்டதுடன் இந்த விடயத்துக்கு நியாயமான தீர்வு ஒன்றினை பெற்றுத்தருவதாகவும் உறுதியளித்தார்.

இன்றைய தினம் அம்பாறை மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் அம்பாறை மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற நிலையிலேயே இக்கண்டனப் போராட்டமும் இடம்பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.



# வாடகை வாகனத்தைப் பிரித்து ஏற்றிய நபர் அநுராதபுரம் பொலிஸாரால் கைதானார்!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கதிர்காமத்திற்கு யாத்திரை செல்லவுள்ளதாகக் கூறி வாடகைக்கு வாகனத்தைப் பெற்று, அதனை கூறுகளாக பிரித்து விற்பனை செய்ய முயற்சித்த நபரொருவரை அநுராதபுரம் குற்றத்தடுப்புப் பொலிஸார் கைது செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதைபொருள் ஆராய்ச்சித் திணைக்கள அதிகாரி என தன்னை அறிமுகப்படுத்தி, தனியார் வாகன வாடகைக்கு விடும் நிறுவனமொன்றில் முற்பணமாக 50,000 ரூபாயும், இரண்டு நாட்களுக்கான வாடகை கட்டணம் 10,000 ரூபாவுமாக மொத்தம் 60,000 ரூபாய் செலுத்தி வாகனத்தைப் பெற்றுக் கொண்ட சந்தேக நபர், நித்தம்புவ பிரதேசத்திலுள்ள கராஜ் ஒன்றில் பாகங்களாகப் பிரித்து கதவு, டயர் மற்றும் முக்கிய பாகங்களை வேறு ஒரு லொறியில் ஏற்றும்போது கைது செய்யப்பட்டுள்ளார்.

கராஜ் உரிமையாளர் சந்தேகத்தில் பொலிஸாருக்கு வழங்கிய இரகசியத் தகவலின் அடிப்படையிலேயே இச்சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதாக அநுராதபுரம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.






## சம்மாந்துறை மஜ்லிஸுறா சபையின் அழைப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் அதாவுல்லா விசேட சந்திப்பு



(எம்.எம்.றம்ஸீன்)

சம்மாந்துறை மக்களின் பொதுவான தேவை மற்றும் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக

மஜ்லிஸுறா கவுன்சில் உறுப்பினர்கள் மற்றும் மக்களுடனான கலந்துரையாடலில் அப் பிரதேச மக்களின் தேவைகள் சம்பந்தமாக விரிவாக கலந்துரையாடப்பட்டது.

ஆசிரியர்கள் இடமாற்றம் சம்பந்தமாக ஒரு தீர்கமான முடிவை எட்டுவதற்காக கருத்துக்களும் தெரிவிக்கப்பட்டன.

இதில், கடந்த வாரம் ஆசிரியர் இடமாற்றம் சம்பந்தமாகவும், குறிப்பாக ஆசிரியைகளின் பொருத்தமற்ற இடமாற்றம் சம்பந்தமாகவும் உரிய நடவடிக்கை எடுப்பதற்காக ஜனாதிபதியின் செயலாளருடன் அண்மையில் பேசிய விடயங்கள் சம்பந்தமாக தெரிவிக்கப்பட்டதுடன், இந்த இடமாற்றம் குறித்து நடைபெற இருக்கும் அம்பாறை மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்தில் காத்திரமான முடிவுகளை பெற்று பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு நம்பிக்கையூட்டும் முடிவை பெற நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தேசிய காங்கிரஸின் தலைவரும் மாவட்ட அபிவிருத்தி குழுவின் இணைத்தலைவருமான ஏ.எல்.எம்.அதாஉல்லா தெரிவித்தார்.

## காங்கேயனோடை அனைத்து பள்ளி வாயல் ஒன்றியம் மண்முனைப்பற்று புதிய பிரதேச செயலாளருக்கு வரவேற்பு



(எம்.ஏ.ஏ.அக்தார்)

காங்கேயனோடை பிரதேசத்தில் மண்முனைப் பற்றின் புதிய பிரதேச செயலாளர் திருமதி கௌரி தினேஸைக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் காங்கேயனோடை ஜாமிஉல் மஸ்ஜித் பெரிய ஜு/ம்ஆப் பள்ளிவாயல் மண்டபத்தில் காங்கேயனோடை அனைத்து பள்ளி வாயல் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் புதிய செயலாளருக்கு வரவேற்பளிக்கப்பட்டதுடன் காங்கேயனோடை அனைத்து பள்ளி வாயல் ஒன்றியத்தினால் நினைவுச் சின்னம் வழுங்கி கௌரவிக்கப்பட்டது.

சம்மாந்துறை உதவி பிரதேச செயலாளரும் காங்கேயனோடை பிரதேச முக்கியஸ்தருமான அஸ்லம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் காங்கேயனோடை அனைத்து பள்ளி வாயல்களின் தலைவர்கள் பிரதேச முக்கியஸ்தர்கள் உலமாக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.


JRIDE
BEYOND THE ROAD
Safety and comfort are our concern
ஜேரைட்
JRIDE
TAXI APP FROM JAFFNA
இலங்கை முழுவதும் | Islandwide
DOWNLOAD PASSENGER APP:
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
jride
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
GET IT ON Google Play
Download on the App Store
வாகன உரிமையாளர்களே ஓட்டுனர்களே!
உங்கள் தனிப்பட்ட மற்றும் வாடகை வாகனங்களை பயன்படுத்தி உங்கள் வருமானத்தை அதிகரிக்க ஒரு தீர்வு!
இதுவரை பதிவு செய்யாதவர்கள் JRide Driver செயலியில் இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் சேவையை தொடங்கலாம்!
DOWNLOAD DRIVER APP:
YOU CAN EASILY REGISTER & ADD YOUR VEHICLE
GET IT ON Google Play
Download on the App Store
SCHEDULED BOOKING
New Feature
புதிய வசதி
நீண்ட தூர பயணத்திற்கு வாகனத்தினை முன்பதாகவே புக்செய்து வைக்க விரும்புகின்றீர்களா?
விமான நிலையத்திற்கு / விமான நிலையத்தில் இருந்து வாகனம் தேவையா?
எமக்கு அழையுங்கள்; தொலைபேசி ஊடாகவோ; WhatsApp மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.
HOTLINE : 706563213 / 703563213
JRIDE TAXI APP
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
மகிழ்ச்சியான பயணம் திருப்தியான கட்டணம்!